

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் கல்லூரி மாணவர்கள் தங்கி பயிலும் வகையில் புதிய விடுதி கற்றல் கற்பித்தல் கூடம் கட்டப்பட்டு வருவதை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் முன்னிலையில் நேற்று (26.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இவ்விடுதியில் தங்கி பயிலும் மாணவர்களிடம் குடிநீர், உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார். உடன் அரசு அதிகாரிகள் எஸ்.எஸ்.மகேஸ்வரன், திருமதி.கவிதா, திருமதி. தேன்மொழி, தாட்கோ வி.ராமதாஸ், கண்ணன் மற்றும் இந்நாள், முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் இரா.கி.பேட்டை ஒன்றியம் விடியங்காடு ஊராட்சியை சேர்ந்த தீபா என்பவருக்கு மருத்துவ செலவிற்காக திமுக இளைஞரணி அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்ட 25 ஆயிரம் ரூபாய் காசோலை தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில் வழங்கினார் உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண், திருவள்ளூர் நகரச் செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆர்.ராஜா, உள்பட இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளனர்.





பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற கபடி வீரர்கள் கண்ணகி நகர் கார்த்திகா மற்றும் திருவாரூர் அபினேஷ் மோகன்தாஸ் ஆகியோருக்கு, சென்னை விமான நிலையத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., செங்கல்பட்டு மாவட்ட கபடிக் கழக செயலாளர் மு.வேல்முருகன் ஆகியோர் மலர் மாலை மற்றும் சால்வை அணிவித்து உற்சாகமாக வரவேற்று வாழ்த்துகளை தெரிவித்தனர்.

### சென்னை மாநகராட்சி சார்பில் நேற்று முன்தினம் மட்டும் 92 இடங்களிலிருந்து

# 37.91 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் சேகரிக்கப்பட்டு எரியூட்டி அகற்றப்பட்டன!

## சென்னை மாநகராட்சி தகவல்!

*சென்னை, அக்.27-*

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் நேற்று முன்தினம் (25.10.2025) ஒரு நாள் மட்டும் 92 இடங்களிலிருந்து 37.91 மெட்ரிக் டன் பழைய சோஃபாக்கள், மெத்தைகள் உள்ளிட்ட பழைய பொருட்கள் சேகரிக்கப்பட்டு, கொடுங்கையூர் எரியூட்டும் நிலையத்திற்கு கொண்டு சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டி அகற்றப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாள்தோறும் சராசரியாக 6,500 மெட்ரிக் டன் திடக்கழிவுகளும், 1,000 மெட்ரிக் டன் கட்டடம் மற்றும் கட்டுமான இடுபாட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பொதுமக்கள் குப்பைகள் மட்டுமல்லாது, தங்களது வீட்டில் உள்ள பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகளை பொது இடங்களில் கொட்டுவதைத் தவிர்த்திடும் விதமாகவும், மக்களுக்கு இதன் காரணமாக ஏற்படும் இடையூறு மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதைத் தவிர்த்திடும் விதமாகவும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பொதுமக்கள் முன்கூட்டியே தரும் தகவலின் அடிப்படையில், அவர்களின் வீடுகளிலிருந்து பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் ஆகிய திடக்கழிவுகளை அகற்றிடும் புதிய நடவடிக்கை 11.10.2025 அன்று தொடங்கப்பட்டது.

அதன்படி, கடந்த இரண்டு சனிக்கிழமைகளில் (11.10.2025 மற்றும் 18.10.2025) 355 நபர்களிடமிருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் 103.48 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு அகற்றப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, நேற்று (25.10.2025) 92 நபர்களிடமிருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் 37.91 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு, கொடுங்கையூரில் உள்ள எரியூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டப்பட்டது.

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையன்று நடைபெறும் இச்சேவையை பெறுவதற்கு, பொதுமக்கள் முன்கூட்டியே பெருநகர சென்னை மாநகராட்சியின் “நம்ம சென்னை” செயலியில் (App) பதிவு செய்ய வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் 1913 என்ற எண்ணிற்கு தகவல் அளிக்கப்பட வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பிரத்யேகமாக வழங்கப்பட்டுள்ள 94450 61913 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு தகவலை அனுப்ப வேண்டும்.

இதன் அடிப்படையில் மாநகராட்சிப் பணியாளர்கள் பதிவு செய்த நபர்களின் வீடுகளுக்கு ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் நேரடியாகச் சென்று, பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் உள்ளிட்ட பொருட்களை சேகரித்து பாதுகாப்பாகவும், அறிவியல் முறையிலும் அகற்றும் பணிகளை மேற்கொள்வார்கள்.

இச்சேவையினை பொதுமக்கள் பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

